LIBRARY
28 FEB 1959
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 24th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: நேற்று கேள்வி நேரத்தின்போது ஒரு புதிய முறையை அனுசரித்தோம். ஆனால் பல அங்கத்தினர்களும் தலைவர்களும் இந்த முறை வேண்டாம்' பழைய முறையே போதும் என்று சொன்னார்கள். ஆகவே பழைய முறையிலேயே தொடர்ந்து போகலாம் என்று நம்புகிறேன்.

(Sri K. Ramachandran stood up in his place.) Probably the hon. Member wants to know what the old 'Murai' is.

பழைய முறை என்னவென்றால் கேள்விபோட்டவர்களுக்கு தொடர்பாக இரண்டு அல்லது மூன்று உப கேள்விக்கு சந்தர்ப்பம் கொடுப்பது. பின்னால் மற்ற அங்கத்தினர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பது. நாலைந்து உப கேள்விக்கு மேல் கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. இதுதான் பழைய முறை.

Periyar and Vaigai waters

* 17 *S.N.Q.*—SRI R. CHIDAMBARA BHARATHI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the extent of lands anticipated to be irrigated under the Periyar Scheme;

(*b*) the extent of lands actually irrigated over and above limit;

(*c*) whether the Periyar lands are being irrigated only by the Periyar water flowing through Parani;

(*d*) whether the waters of Vaigai are also utilised; if so why; and

(*e*) whether there is any fixed level for the waters in the Vaigai river as there is in the case of Periyar? Where and how the water-level is taken?

THE HON. SRI P. KAKKAN: (*a*) The Periyar Project was designed to irrigate an extent of 143,000 acres.

(*b*) The area irrigated is within the above limit and has not exceeded it at any time.

(*c*) & (*d*) They are mostly irrigated with Periyar waters, as Vaigai waters are not depended upon for Periyar lands. But occasionally Vaigai waters are also being used as some of the old ayacut under Vaigai are included in the Periyar ayacut and this is entitled to Vaigai supply with reference to a judgment of the High Court.

(*e*) At present, there are no arrangements for assessing the flows in Vaigai, and after Vaigai reservoir comes to function, arrangements will be made for assessing the flows.

Vaigai waters

* 18 *S.N.Q.*—SRI R. CHIDAMBARA BHARATHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the nature of assurance given to the ayacutdars of the Vaigai river at the time of the construction of the Vaigai Dam; and

(*b*) the steps taken to implement the assurance?

THE HON. SRI P. KAKKAN : (*a*) An assurance was given to the ryots that the scheme would be so worked that no portion of the Vaigai flows impounded in the reservoir would be allowed for areas other than those under the Old Vaigai channels and tanks served by them.

(*b*) Implementation can be done when the project is thrown open for operation.

* 19 *S.N.Q.*—SRI R. CHIDAMBARA BHARATHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have any proposal to constitute a Committee to formulate a scheme in the Vaigai ayacut lands in Madurai and Ramanathapuram districts using the Vaigai waters?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸர், வைகை எரியிலிருந்து பேரணைக்கு தண்ணீர் கொண்டு போவதற்கு முன்பாக ராமனாதபுரம் சமஸ்தான முதல் மந்திரியாக முத்திருளப்பிள்ளை அவர்கள் இருந்த காலத்தில் இந்த வைகை அணை கட்ட முடியாது என்று இரண்டு இன்ஜினியர்கள் தெரிவித்ததின் பின்னால் மூன்றாவது இன்சினியர் முயற்சி எடுத்து இந்த பெரியாறு பிராஜக்டைக் கட்டும்போது இதிலிருந்து 90 ஆயிரம் எக்கர்களுக்கு மேல் பாசனத்திற்கு தண்ணீர் கொடுப்பதில்லை என்று அப்போதிருந்த சர்க்கார் ஹைகோர்ட்டில் உறுதி கூறியிருக்கிறதா, அப்படி உறுதி கூறியிருக்கும்பொழுது இப்போது லட்சத்தி நாற்பதினாயிரம் எக்கர்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் முன்னால் கூறியிருந்ததை மாற்றியிருப்பது இப்போதுள்ள சர்க்காரினுடைய கொள்கை விரோதமானதில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் கேள்வியில் அனேகம் கேள்விகள் அடங்கியிருக்கின்றன. இதற்கு எல்லாம் தனித்தனியாக கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸார், இபோது கனம் மந்திரி அவர்கள் சொல்லியதிலிருந்து தண்ணீரை இதுவரை அளவு எடுக்கவில்லை என்று தெரிகிறது. அப்படியானால் அவ்விதம் அளவு எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அவ்விதம் அளவு எடுக்கின்ற காலம் வரையிலும், வைகை பாசனத்திலிருந்து தண்ணீர் கிடைக்காததினால் விவசாயிகள் அடைந்திருக்கும் நஷ்டத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க சர்க்கார் முன் வருமா ?